**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**

**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ம் நாள் வியாழக் கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசி மாதம் 17 ம் நாள்

**இ.ம.எண். 3/2024**

**இல்**

**அசல் வழக்கு எண். 237/2019**

1. குருசாமி ( இறந்தார்) ..... வாதி
2. அம்சவள்ளி
3. பூங்குழலி
4. ராஜ்
5. சோபியா ........ 2 முதல் 5 /இறந்த வாதியின் வாரிசுகள்/ புதிய தரப்பினர்கள்

//எதிர்//

1. கனகசபை
2. நடராஜன்
3. தனி வட்டாட்சியர்
4. வருவாய் தனி கோட்டாட்சியர்
5. தமிழ்நாடு அரசு சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டிணம். .......எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 30.09.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் வழக்கறிஞர் திரு. A.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எ.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது பிராதை திருத்தம் செய்து கொள்ள 2 முதல் 5 மனுதாரர்கள்/ இறந்த வாதியின் வாரிசுகள் / புதிய தரப்பினர்களுக்கு அனுமதி வழங்க உத்திரவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் 2ம் மனுதாரர். அசல் வழக்கில் இறந்த வாதியின் மனைவி மற்றும் வாரிசுகளில் ஒருவர் ஆவார். 3 முதல் 5 மனுதாரர்கள் 2ம் மனுதாரரின் பிள்ளைகள் ஆவார்கள். அவர்களுக்காகவும் இந்த அஃபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் வாதியாகிய 2ம் மனுதாரரின் கணவர் இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இவ்வழக்கின் வாதியாகிய குருசாமி கடந்த 15.05.2021ல் கொரோனா பெருந்தொற்றால் இறந்துவிட்டார். அவருக்கு 2ம் மனுதாரரும், அவரது பிள்ளைகளான 3 முதல் 5 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள்.மேலும் புதிய தரப்பினர்களாகிய மனுதாரர்கள் வாதியின் இருப்பிடத்திலேயே வசிப்பதால் அவர்களை இவ்வழக்கில் இறந்த வாதியின் வாரிசுகளாக சேர்க்க இவ்வழக்கில் இடை மனு எண்.2/2024 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 15.04.2024 அன்று அனுமதிக்கப்பட்டது. இதனை அனுசரித்து தாவா பிராதை திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகிறது என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் தாவா சொத்துக்கள் அனைத்தும் நாகை மாவட்டத்தில் அமைந்திருந்தது. தற்போது நாகை மாவட்டத்திலிருந்து மயிலாடுதுறை மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளதால் 4 மற்றும் 5 ம் பிரதிவாதியின் அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இதனை அனுசரித்து 4 மற்றும் 5ம் பிரதிவாதியின் முகவரியில் உள்ள நாகப்பட்டிணம் என்ற ஊரை மாற்றி மயிலாடுதுறை என்று திருத்தம் செய்யவேண்டியது அவசியமானது என்று கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள திருத்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. இந்த எதிர் உரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர மற்ற திருத்த மனுவில் கண்ட அனைத்து விவரங்களையும் இந்த முதல் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். அதனை நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்த மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்படுகிறது. எனவே இம்மனு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என கூறியுள்ளார்கள்.

**தீர்வு:**

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர் தரப்பில், 2ம் மனுதாரரின் கணவரும், 3 முதல் 5 மனுதாரர்களின் தகப்பனாருமான குருசாமி என்பவர் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோதே குருசாமி கடந்த 15.05.2021ல் கொரோனா தொற்றால் இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகளாகிய 2 முதல் 5 மனுதாரர்கள் இந்த வழக்கில் வாரிசுகளாக சேர்க்கக்கோரி மனுதாக்கல் செய்து அந்த மனு இடை மனு எண்.2/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதாகவும், அதனை அனுசரித்து வழக்குரையை திருத்தம் செய்யவேண்டியது அவசியமாக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்களை தவிர முதல் வாதிக்கு வேறு வாரிசுகள் இல்லை என்பதை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், இந்த காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. முதல் வாதி குருசாமி என்பவர் 15.05.2021 ல் இறந்துள்ளார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். குருசாமியின் வாரிசுகளான

2 முதல் 5 மனுதாரர்கள் தங்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி மனுதாக்கல் செய்து அந்த மனு இடை மனு எண். 2/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு உள்ள நிலையில் இந்த வழக்குரையை திருத்தம் செய்தால் மட்டுமே இந்த வழக்கினை மேல் நடத்த ஏதுவாக இருக்கும். எனவே, இந்த வழக்குரையை திருத்தம் செய்வது அவசியமாக உள்ளதால் நீதியின் நலன் கருதி இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 03.10.2024 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P. கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி

இணைப்பு :இல்லை

(ஒப்பம்) P. கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி